RESEARCH ARTICLE

IOR PRESS

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL

சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI: 10.34256/irjt20214

# தமிழ் இலக்கியங்களில் தவம்

## சு. ஞானதீபன் [அ, *]

[அ] தமிழ்த்துறை, அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, குமாரபாளையம், நாமக்கல்-638183, தமிழ்நாடு, இந்தியா

# Penance in Tamil Literature

## S. Gnanadheepan [a, *]

[a] Department of Tamil, Government Arts and Science College, Komarapalayam, Namakkal-638183, Tamil Nadu, India

* Corresponding Author: gnanadeepan30@gmail.com

Received : 13-01-2020
Accepted : 09-03-2020

**ABSTRACT**

There are those who attained godliness through penance. Doing something for petty pleasures is not considered as penance and it is useless. Thiruvalluvar, Thirumoolar, eighteen Siddhas, Vallalar etc have explained about penance. It is realised that through penance we can destroy the evil, make good people live, achieve the good and can overcome the death. If you do penance, the way to heaven will be opened. Hymns in Tamil literature speak of the merits of penance. This article explains about penance and how Thiruvalluvar, Auvaiyar, Purumaadhi penance, Sambavi Mudra and Kesari Mudra explains about penance.

**Keywords:** Thiruvalluvar, Thirumoolar, Vallalar, Mudra

## முன்னுரை

தவத்தின் மூலமாக இறைநிலை அடைந்தவர்கள் உண்டு. அற்ப இன்பங்களுக்காக ஆசைப்பட்டு செய்யும் முயற்சிகள் தவம்செய்வதாகக் கருதப்படாது. அது அவம் செய்வதாகக் கருதப்படும். தவம் குறித்து திருவள்ளுவர், திருமூலர், பதினெண் சித்தர்கள், வள்ளலார் முதலியோர் விளக்கியுள்ளனர். தமிழ் இலக்கியங்களில் தவம் என்ற இந்த ஆய்வுக்கட்டுரையில் தவம் பற்றி திருவள்ளுவர் தரும் விளக்கங்கள், ஔவையார் உணர்த்தும் தவம், ஆக்கினை தவம் எனப்படும் புருவமத்தி தவம், சாம்பவி முத்திரை, கேசரி முத்திரை ஆகியன விளக்கப்பட்டுள்ளன.

## திருக்குறளில் திருவள்ளுவர் உணர்த்தும் தவம்

தவத்தின் தன்மையை திருவள்ளுவர் தவம் என்ற 27 வது அதிகாரத்தில் பத்து குறட்பாக்களில் கூறியுள்ளார். ஏற்கனவே தவம் செய்யும் தாகம் கொண்டோர்க்கே தவமுயற்சிகள் கைகூடும். வெறும் புறச்சடங்குகளை தவம் என்று கருதுவோர் செய்வது தவம் அல்ல அது அவம் ஆகும்.

“தவமும் தவம்உடையார்க்கு ஆகும் அவம்அதனை

அஃதுஇலார் மேற்கொள் வது” (Varadharasan, 2004)

தீயதை அழிக்கலாம் நல்லவர்களை வாழ வைக்கலாம். தவம் செய்வோரின் எண்ணத்திற்கு அந்த ஆற்றல் உண்டு.

“ஒன்னார்த் தெறலும் உவந்தாரை ஆக்கலும்

எண்ணின் தவத்தான் வரும்” (Varadharasan, 2004)

நினைத்ததை நினைத்தபடி அடையும் வாய்ப்பு இருப்பதால்தான் இங்கு தவம் செய்வது முயலப்படுகிறது.

“வேண்டிய வேண்டியாங்கு எய்தலால் செய்தவம்

ஈண்டு முயலப் படும்” (Varadharasan, 2004)

தவத்தில் முழுமை பெற்றோர், மரணமில்லா பெரு வாழ்வு என்னும் நிலையை அடைய முடியும்.

“கூற்றம் குதித்தலும் கைகூடும் நோற்றலின்

ஆற்றல் தலைப்பட் டவர்க்கு” (Varadharasan, 2004)

## ஔவையார் உணர்த்தும் தவம்

“அரிது அரிது மானிடர் ஆதல் அரிது
மானிடர் ஆயினும் கூன் குருடு செவிடு
பேடு நீங்கி பிறத்தல் அரிது
பேடு நீங்கி பிறந்த காலையும்
ஞானமும் கல்வியும் நயத்தல் அரிது
ஞானமும் கல்வியும் நயந்த காலையும்
தானமும் தவமும் தான்செயல் அரிது
தானமும் தவமும் தான்செய்வ ராயின்
வானவர் நாடு வழிதிறந் திடுமே”

தீயதை அழிக்கவும், நல்லவர்களை வாழ வைக்கவும், வேண்டியதை எய்தவும், மரணத்தை வெல்லவும் தவத்தால் இயலும் என்று திருக்குறள் கூறுகிறது. தானம், தவம் செய்தால் வானவர் நாடு வழி திறந்திடும் என்று ஔவையாரின் பாடல் கூறுகிறது. தவம் பற்றி இவ்விரு புலவர்களின் கருத்து இவை ஆகும்.

## ஆக்கினை தவம் எனப்படும் புருவமத்தி தவம்

புருவ மத்தியில் பிட்யூட்டரி சுரப்பி உள்ளது. அது உடலின் தலைமை சுரப்பி ஆகும். புருவமத்திக்கு நெற்றிப்பொட்டு, புருவப்பூட்டு, நெற்றிக்கண் என்ற பெயர்கள் உண்டு. புருவ மத்தியில் எண்ணத்தை வைத்து செய்யும் தவத்திற்கு ஆக்கினை தவம் என்று பெயர். பொட்டு, சந்தனம், திருநீறு, நாமம் வைப்பது புருவ மத்தியில் தரும் ஒரு தொடு தீட்சை

ஆகும். ஆதனால் பிட்யூட்டரி சுரப்பி சீராக இயங்கி நம் மனதை பண்படச்செய்கிறது. கண்ணாடி வில்லை (டநளெ) சூரிய ஒளியை குவிப்பது போல புருவ மத்தியில் ஞானக்கண் என்ற மூன்றாம் கண்ணாகிய நெற்றிக்கண் ஆக்கினை தவத்தால் கிடைக்கிறது. சாதாரண கண்களின் திறனுக்கு ஓர் எல்லை உண்டு. தொலை தூரக்காட்சிகளையோ அல்லது பின்னோக்கியோ ஊனக்கண்களால் காண முடியாது. ஆனால் ஞானக்கண் திறந்தால் எல்லைகளைக் கடந்து எல்லா இரகசியங்களையும் நம்மால் உணர முடியும். மாடியின் உச்சியில் நிற்பவர்க்கு வீட்டின் முன்பு கடந்து சென்ற வண்டி, வீட்டின் முன்பு நிற்கின்ற வாகனம், வீட்டை நோக்கி வந்து கொண்டிருக்கும் வாகனம் என இறந்த காலம், நிகழ்காலம், எதிர் காலம் என முக்காலமும் தெரியும். ஆனால் வீட்டின் கீழே நிற்பவர்க்கு வீட்டின் முன்பு நிற்கும் வாகனம் மட்டும் தெரியும். அதாவது நிகழ்காலம் மட்டுமே தெரியும். பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு நடந்த நிகழ்வுகள், இனிவரும் காலங்களில் நடக்கும் நிகழ்வுகள் தெரியாது. ஆக்கினை தவம் என்ற சிகரத்தின் உச்சியில் நிற்போரக்;கு நெற்றிக்கண் என்ற ஞானக்கண்ணால் முக்காலமும் உணரமுடியும். இதுவே சிவ நிலை. எனவே சிவபெருமானுக்கு நெற்றிக்கண் இருப்பதாகச் சொல்லப்படுவது இந்நிலையை உணர்த்தும் குறியீடே ஆகும். இத்திறனையே "கண் உள்ளவன் எவனோ அவன் காணக்கடவான்" என்று பைபிள் கூறுகிறது. "யார் அருளாசி பெற்றவன்? உனக்குள்ளே உள்ளவன் அருளாசி பெற்றவன். ஆனால் அவன் துரதிருஸ் டவசமாக உறங்கிக்கொண்டும் குறட்டை விட்டுக்கொண்டும் உள்ளான். அவனுக்கு எப்படி ஞானக்கண் திறக்கும?" என்று ஓசோ கேட்கிறார்.

"புருவத்திடை நின்று புண்ணியனைக் காணின்

உருவற்று விளங்கும் உடம்பு"

என்று ஔவையார் கூறுகிறார்.

"நெற்றிக்கு நேரே புருவத்து இடைவெளி

உற்றுஉற்றுப் பார்க்க ஒளிவிடும் மந்திரம்

பற்றுக்குப் பற்றாய் பரமன் இருந்திடம்

சிற்றம்பலம் என்று சேர்ந்து கொண்டேனே"

என்று திருமூலர் கூறுகிறார்.

"கொங்குதேர் வாழ்க்கை அம்சிறைத் தும்பி!

காமம் செப்பாது, கண்டது மொழிமோ

பயிலியது கெழீஇய நட்பின், மயில் இயல்

செறி எயிற்று, அரிவை கூந்தலின்

நறியவும் உளவோ? நீ அறியும் பூவே?" (Somasundarananr, 1965)

குறுந்தொகையில் இறையனார் பாடிய பாடல் இது

இறையனாரை சிவபெருமான் என்றும் அவர் நக்கீரர் உடன் வாதாடிய பாடல் இது என்றும் புராணங்கள் கூறுகின்றன.

"பூக்களிலே இருக்கின்ற தேனினை ஆராய்ந்து உண்ணும் வாழ்க்கையைப் பெற்ற அழகிய சிறகினைப் பெற்ற வண்டே! நான் இன்புற வேண்டும் என்பதற்காகச் சொல்லாமல், நீ

உண்மையாகவே அறிந்து கண்டதைக் கூறுவாயாக. என்றும் என்னோடு பொருந்திய, உரிமை நட்பினைக் கொண்டவள் என் தலைவி. மயில் போன்ற மென்மையும் வரிசையான பற்களும் கொண்ட அவளின் கூந்தலிலே வீசுகின்ற மணத்தைப் போல, நீ அறிந்த மலர்களிலே மணமுடைய மலர்களும் உள்ளனவா?” என்பது இதன் பொருள். கூந்தலுக்கு மணமுண்டு என இப்பாடல் உணர்த்துவதாகவும், கூந்தலுக்கு மணம் கிடையாது எனவும், நெற்றிக்கண் திறந்தாலும் குற்றம் குற்றமே என நக்கீரர் வாதிடுவதாகவும், சிவபெருமான் நெற்றிக்கண்ணால் நக்கீரரை எரித்து பின், உயிரோடு எழுப்பி அருள் புரிந்ததாகவும் திருவிளையாடல் கதைகள் கூறுகின்றன.

இதில் ஆக்கினை தவம் கூறப்படுகிறது. நெற்றிக்கணணால்; நக்கீரரை எரித்தார் என்பது சாதாரண கண்களுக்கு வெளிப்பார்வைக்கு உணரும் பொருள் ஆனால் ஞானக்கண் கொண்டு பார்த்தால் இதில் உள்ள யோக இரகசியம் புலனாகும். ஒரு மெழுகுவர்த்தி சுடரிலிருந்து எரியாத இன்னொரு மெழுகுவர்த்திக்கு சுடர் ஏற்றி ஒளிவிட செய்யமுடியும். அதுபோல சிவபெருமான் தமது நெற்றிக்கண் சோதி மூலமாக நக்கீரரின் புருவ மத்தியில் நயன தீட்சை என்ற பார்வை தீட்சை மூலமாகவே ஒளி ஏற்றி, நக்கீரரின் அறியாமை இருளை எரித்து, ஞானக்கண்ணை திறக்கச் செய்கிறார். ஞானக்கண் திறந்தவுடன் கூந்தலுக்கு மட்டு மல்ல, உடல் முழுவதும் மணமுண்டு. வியர்வைக்கும் உமிழ்நீர்க்கும் மணமுண்டு, யாருக்கு என்றால் உடம்பை புடம்போட்ட தங்கம்போல தவம் செய்து ஆக்கிய மகான்களுக்கு என்பதை உணர்கிறார். அப்படிப்பட்ட மகான்களுக்கு கூந்தல் மட்டுமல்ல வியர்வையும் மணக்கும் எச்சில் கூட நோய்தீர்க்கும் அமிழ்த சக்தியாக இருக்கும். இறைத்தூதர் நபிகள்நாயகம் அவர்கள் தமது சீடர் அபூபக்கரின் மடியில் தலைவைத்து உறங்கிக்கொண்டிருந்தபோது அபூபக்கரை பாம்பு தீண்டியது. நபிகளின் உறக்கம் கலையக்கூடாது என்று அபூபக்கர் வலியைப் பொறுத்துக் கொண்டார் எனவே மரணமடையும் கட்டத்திற்கு நெருங்கி விட்டார். உண்மையை உணர்ந்த நபிகள்நாயகம் அவர்கள் அபூபக்கரை காப்பாற்ற வேண்டி உடனே தன் உமழ்நீரை பாம்பு கடித்த இடத்தில் வைத்தார். அபூபக்கருக்கு விடம் உடனே நீங்கியது. இதன் மூலமாக ஆக்கினை தவத்தின் சிறப்பை உணர முடிகிறது.

புருவத்திடை நின்று புண்ணியனைக் காணின் உருவற்று விளங்கும் உடம்பு என்று ஔவையார் கூறுகிறார். நெற்றிக்கு நேரே புருவத்து இடைவெளி உற்றுஉற்றுப் பார்க்க ஒளிவிடும் மந்திரம் பற்றுக்குப் பற்றாய் பரமன் இருந்திடம் என்று திருமூலர் கூறுகிறார்.

## சாம்பவி முத்திரை

தமிழில் உயிர் எழுத்துகள் 12, மெய்யெழுத்துகள் 18, உயிர் மெய்யெழுத்துகள் 216 மற்றும் மூன்று புள்ளி வடிவிலான (ஃ) ஆய்த எழுத்தும் உள்ளன. ஆய்த எழுத்தில் உள்ள மூன்று புள்ளிகள் நமது இரண்டு புறக்கண்களையும், நெற்றிக்கண் எனப்படும் ஞானக்கண்ணையும் குறிக்கிறது. நெற்றிக்கண் தவத்திற்கு சாம்பவி முத்திரை என்று பெயர். உயிர், மெய், உயிர்மெய்யெழுத்துகளை கற்பதால் என்ன பயன்? வாலறிவன் என்ற தவ நிலையை அடையாவிட்டால் கற்பதால் என்ன பயன்?

“கற்றதனால் ஆய பயன்என்கொல் வாலறிவன்

நற்றாள் தொழாஅர் எனின்” (Varadharasan, 2004)

எனவே ஞானக்கண் எனப்படும் நெற்றிக்கண் திறப்பதே நம்மை காக்கும் ஆய்தமாகும் என்பதை உணர்த்தவே ஞானத்தமிழ் மொழியில் மூன்று புள்ளி வடிவிலான (ஃ) ஆய்த

எழுத்தை வைத்தனர். இரண்டு ஊனக்கண்களால் பயனில்லை. மூன்றாம் கண் திறப்பதே சிவனிலை. அதுவே நம்மைக் காக்கும் ஆய்தமாகும் என்பதை உணரமுடிகிறது.

## கேசரி முத்திரை

"நுனிநா அணரி அண்ணம் வருட

ரகாரம் ழகாரம் ஆயிரண்டும் பிறக்கும்" (Thamizhannal, 2010)

நுனிநா அண்ணாந்து அண்ணத்தைத் தடவ ர், ழ் இரண்டும் பிறக்கும் என்று பிறப்பியல் 95 ஆம் நூற்பாவில் தொல்காப்பியர் கூறுகிறார். நுனி நாவை அண்ணத்தின் (மேற்பல்லின் அடிப்பகுதி) மேல் வருடி அப்படியே வைத்துக்கொள்வது கேசரி முத்திரை ஆகும். இதனால் நம் உமிழ்நீர் அமிழ்தத்தின் சக்தியைப் பெற்று நோய் தீர்க்கும் ஆற்றலைப் பெறுகிறது. தமிழ் என்று சொல்லி, ழ் சொல்வது போல் நாவை அண்ணத்தின் மேல் வைத்துக்கொள்வது அமிழ்தத்தின் சக்தியைத் தருகிறது. தமிழுக்கும் அமுது என்று பேர் என்பது உண்மைதான். தமிழ் எழுத்துகளில் ஃ என்பதும், ழ் என்பதும் தவ முறையைக் குறிப்பிடுகின்றன என்பதை இதன் மூலம் அறியமுடிகிறது.

## முடிவுரை

"தமிழ் இலக்கியங்களில் தவம்;" என்னும் தலைப்பிலான இந்த ஆய்வின் முடிவுகள் பின்வருமாறு அமைகிறது. தீயதை அழிக்கவும், நல்லவர்களை வாழ வைக்கவும், வேண்டியதை எய்தவும், மரணத்தை வெல்லவும் தவத்தால் இயலும் என்பதை உணர முடிகிறது. தவம் செய்தால் வானவர் நாடு வழி திறந்திடும் என்ற நம்பிக்கை நிலவியதை உணர முடிகிறது. புருவத்திடை நின்று புண்ணியனைக் காணின் உருவற்று விளங்கும் உடம்பு, நெற்றிக்கு நேரே புருவத்து இடைவெளி பற்றுக்குப் பற்றாய் பரமன் இருந்திடம் என்ற கருத்தமைந்த பாடல்கள் ஆக்கினைத் தவத்தின் சிறப்பைக் கூறுகின்றன. வாலறிவன் என்ற தவ நிலையை அடையாவிட்டால் கற்பதால் என்ன பயன்? என்ற குறள் வரிகள் தவத்தின் அவசியத்தைக் காட்டுகிறது.

## References

Somasundarananr, P.V. (1965) Kurunthogai, Tirunelveli Thennindia Saiva Sithantha Noorpathippu Kazhagam, Chennai, India

Thamizhannal, (2010) Tholkappiyam, Manivasakar Pathippagam, Chennai, India.

Varadharasan, Mu., (2004) Thirukkural Thelivurai, The South India Saiva Siddhantha Works Publishing Society, Tinnevelly, India.

**Funding:** NIL

**Acknowledgement:** NIL

**Conflict of Interest:** NIL

## About the License:

Attribution 4.0 International (CC BY 4.0)

The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License